# 'கம்பா நதி' நாவல் காட்டும் நதிக்கரை மக்களின் சமூக சிக்கல்கள்

ஷா. முஹம்மது அஸ்ரின்,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு *(UGC-JRF),*
ஜமால் முகமது கல்லூரி *(தன்னாட்சி),* திருச்சி *– 20.*

**முன்னுரை:**

ஆற்றங்கரைகளிலும் நதிக்கரைகளிலும் மனிதர்கள் குடியேறிய பின்னர், அவை நாளடைவில் நாகரிகமாக வளர்ச்சி பெற்றது. இன்று, உடைகளை ஆடம்பரமாக அணிந்து நகரங்களில் வாழும் மக்களின் முன்னோர்களும் மேற்கூறிய கரையோர மக்களாகவே வாழ்ந்திருப்பர். திருநெல்வேலியை பாண்டிய மன்னன் ஆட்சி செய்த காலத்தில் '**கம்பா நதி**' என்னும் பெயருடைய ஆறு ஓடியது. இப்போது நீரின்றி நிலமாகக் காட்சி அளிக்கும் கம்பா நதிக்கு அருகே வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும், அம்மாவட்ட வட்டார வழக்கை மொழிநடையாகக் கொண்டு படம்பிடித்துக் காட்டியுள்ளார் எழுத்தாளர் வண்ணநிலவன். அவர் காட்டும் நதிக்கரை மக்களின் வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்களை மூன்று தலைப்புகளின்கீழ் பகுத்து வெளிக்கொணர இக்கட்டுரை முனைகிறது.

**1. ஏற்றத்தாழ்வு:**

மனிதராகப் பிறந்த அனைவரும் ஒரு தாய் மக்கள் ஆவர், சாதியால் ஏற்றத்தாழ்வு கூடாது என எண்ணற்ற அறிஞர்கள் வலியுறுத்தினாலும், கிராம மக்களின் கவனத்திற்குச் செல்வதில்லை. "**மனித உயிர்கள் சமம் என்று கருதுவதைப் போலவே மற்ற எல்லா ஜீவன்களின் உயிர்களும், உயர்வானதே என்று கருதுவது இந்து மதம்.**" **(கடவுளின் அடிமைகள், பக். 93)** எனக் காந்தியடிகள் கூறுயுள்ளார்.

திரையரங்கில் பணியை முடித்துவிட்டு சங்கரன் பிள்ளையும் சூரியும் வீ ட்டுக்கு வரும் வழியில் அசைவ உணவுண்ட எச்சில் இலைகள் காணப்படுகிறது. இதனை கண்ட சங்கரன் பிள்ளை, "**…ச்சை…. வர வர இந்தத் தெருவையே பிள்ளை மாரத் தவுத்தி மத்த சாதிச் சனங்க வளைச்சுப் புடிச்சுப் போடுங்க போலிருக்கு….. எங்கன கால வைச்சாலும் ஒரே நரகலாக் கெடக்கு…**" **(கம்பா நதி, பக். 10)** என சூரியிடம் கூறுகிறார்.

நடராஜ பிள்ளை தனது மகன் கண்ணனுக்கு வீ டுகளில்பணம் வசூலிக்கும் அரசு வேலையை தனது நண்பனும், அந்நகரின் சேர்மென்னாகவும் இருக்கும் ஆஸ்டின் பிள்ளையின் பரிந்துரையில் வாங்கிக் கொடுக்கிறார். ஆனால், வார்ட் என்பது அனைவருக்கும் பொதுவானதாகும். எனவே, பிற மதத்தவர்களும், பிற சாதிக்காரர்களும் வாழ்ந்தனர். இதனால், தனது மகனை சேர்மெனிடம் அழைத்துச் சென்று வேறு வார்டுக்கு வேலையை மாற்றித் தருமாறு கூறுகிறார். இதனை, "**அவனுடைய வார்டில் சில குறிப்பிட்ட இன மக்களின் வீ டுகள் இருந்தன. இதை உத்தேசித்து இந்த வார்டை மாற்றித் தர வேணுமென்று நடராஜ பிள்ளையே ஒரு நாள் கடைக்குப் போகிற வழியில் ஆஸ்டின் பிள்ளை வீ ட்டுக்குக்**

**கண்ணனையும் அழைத்துக் கொண்டு போய்ச் சொன்னார்." (கம்பா நதி, பக். 44)** என்ற மேற்கோள் புலப்படுத்துகிறது.

குத்தாலம் என்ற இளைஞனை ஊரிலுள்ள மக்கள் குறிப்பிடும் போது, **"அவனுடைய அம்மாவும் அப்பாவும் வேறு வேறு ஜாதி என்று கூட ஊரில் ஒரு பேச்சு உண்டு." (கம்பா நதி, பக். 18)** எனக் கூறுகின்றனர். மேலும், சரவணபிள்ளை–சங்கர வடிவு தம்பதி வெள்ளமடத்தாச்சியின் வீ ட்டில் வாடகைக்கு இருந்தனர். வீ ட்டின் வாடகையை வாங்க வந்த ஆச்சி, **"கடைசி ஜாதி தொட்டு பத்து ஜாதியும் வந்து போகிறது." (கம்பா நதி, பக். 101-102)** என தம்பதியிடம் கேட்கிறாள்.

நட்பு என்பது நிறத்தையோ, குலத்தையோ, மதத்தையோ அடிப்படையாகக் கொண்டு தோன்றுவதில்லை. மாறாக இருவரின் உள்ளங்களின் ஒற்றுமையிலிருந்து தோன்றும். ஆனால், தாழ்ந்த குலத்தைச் சார்ந்த சௌந்திரத்திற்கு, அவளது குலத்தைச் சேர்ந்த பெண்ணே தோழியாக அமைகிறாள். இதனை, **"எவ்வளவுதான் தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும் கூட எல்லாப் பெண்களுக்கும் ரொம்பவும் அந்நியோன்னியமான ஒரு சிநேகிதி தேவைப்படுகிறாள்." (கம்பா நதி, பக். 82)** என்ற வரிகளால் புலப்படுகிறது.

கம்பா நதியின் கதாப்பாத்திரங்களான சங்கரன் பிள்ளை, நடராஜ பிள்ளை, வெள்ளமடத்து ஆச்சி போன்று சாதியால் பிரித்துப் பார்ப்பவரை நோக்கியே, **"தன்னை உயர்ந்த ஜாதியாகவும் இன்னொரு மனிதனை தாழ்ந்த ஜாதியாகவும் கருதுபவன் மனநோயாளி" (மதங்களின் பார்வையில் பெண்கள், பக். 59)** என அம்பேத்கர் கூறியுள்ளார்.

**2. உறவு:**

சங்க காலத்தில் மருத நில தலைமக்களின் ஊடலுக்கு முக்கியமான காரணமாக பரத்தையர் தொடர்பு விளங்கியது. இன்றைய நவீ ன உலகிலும் இத்தகைய தொடர்பு வழக்கத்திலே தான் உள்ளது. அசதிக்கு ஒன்று, வசதிக்கு ஒன்று என கிராமங்களிலும் நகரங்களிலும் சில மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சங்கரன் பிள்ளையோடு (அண்ணாச்சி) ஒரே இடத்தில் பணிபுரியும் சூரி, **"ஓங்களுக்கென்ன அண்ணாச்சி?... ஒதுங்கதுக்கு ஒண்ணுக்கு ரெண்டு எடம் இருக்கு." (கம்பா நதி, பக். 10)** என எதார்த்தமாகக் கூறுவது அம்மக்களின் உறவுச் சிக்கல்களை எடுத்துக் காட்டுகிறது.

**"முருகையா பிள்ளையுடைய மகன் தச்சநல்லூரில் நாடகக்காரி வீ ட்டில் போய்க் கிடந்தான்." (கம்பா நதி, பக். 19)** மற்றும் **"நடராஜபிள்ளையின் தகப்பனார் சுத்த மல்லியில் இருந்த கொஞ்ச நஞ்சத்தையும் நாடகக்காரிகளிடம் கொடுத்துத் தோற்றுப்போய், திருச்செந்தூர் சத்திரத்தில், நாதியில்லாமல் செத்துக் கிடந்தார்." (கம்பா நதி, பக். 37)** போன்ற ஊர்மக்களின் கூற்றுகள், கண்ணகியை பிரிந்து கணிகையான மாதவியோடு வாழ்க்கை நடத்திய கோவலனையும், ஆதிரையை விட்டுப் பிரிந்து நாடகக்காரியிடம் அனைத்து செல்வங்களையும் இழந்த சாதுவனையும் நினைவூட்டுகிறது.

சங்க காலத்தில் பரத்தையர் வசிக்கும் தெருக்கள் **'சேரி'** என வழங்கப்பட்டது. அங்கு தலைவன் சென்றதை அறிந்தால் இருவருக்கும் இடையில் ஊடல் உண்டாகும். அதுபோல, இன்று கிராமங்களில் சில தெருக்கள் சேரியாக விளங்குகின்றன. கம்பா நதியில் 'கனகராய முடுக்குத் தெரு' சேரியாக விளங்கியதை, **"கல்யாணத்துக்கு முன்பே கனகராய முடுக்குத் தெருவுக்கு சங்கரன்பிள்ளை அடிக்கடி போய் வருவார். கனகராய முடுக்குத் தெருவில் கொஞ்சம் மலையாளத்துப் பொம்பளைகள் உண்டு." (கம்பா நதி, பக். 20-21)** என்ற ஊர்மக்களின் கூற்றால் அறியமுடிகிறது.

- **கணவன் - மனைவி உறவு:**

பணி நிமித்தமாகக் கணக்கப்பிள்ளை வீட்டுக்குச் சென்று தங்கிய சங்கரன் பிள்ளைக்கும், கணக்கப்பிள்ளையின் மனைவியான சௌந்திரத்துக்கும் தொடர்பு ஏற்பட்டு, தனது கணவனை விட்டு நீங்கி திருமணமான சங்கரன் பிள்ளையோடு திருமணம் செய்யாமல் வாழ்கிறாள். இதனை,

**"தங்கப் போன இடத்தில் கணக்கப்பிள்ளை சம்சாரம் சௌந்திரத்துக்கும் இவருக்கும் எப்படியோ தொடுக்கிக் கொண்டுவிட்டது." (கம்பா நதி, பக். 21)** மற்றும் **"பிறகென்ன, சௌந்திரம் தன் புருஷனை விட்டு விட்டு சங்கரன் பிள்ளையோடு வந்து விட்டாள். முன்னெச்சரிக்கையாக, தனக்கும் தன் புருஷனுக்கும் ஒத்து வரவில்லையென்று ஸ்ரீவைகுண்டம் கோர்ட்டில் மனுவும் தாக்கல் செய்து விட்டாள்." (கம்பா நதி, பக். 22)** போன்ற வரிகளால் அறிய முடிகிறது.

இவர்களது உறவால் முன்னரே திருமணமான சங்கரன் பிள்ளையின் மனைவி மரகதத்தின் வாழ்வும், சௌந்திரத்தின் கணவனான கணக்கப்பிள்ளையின் வாழ்வும் பாதிக்கிறது.

- **மாணவன் – மாணவி உறவு:**

படிக்கப் போன இடத்தில் முஸல்மான் மீது காதல் வயப்பட்டு, வீட்டைவிட்டு அவனோடு நிர்மலா ஓடிப்போகிறாள். **"டைப்ரைட்டிங் படிக்கப் போன இடத்தில் முனிஸிபாலிட்டி சேர்மனின் அக்கா மகனுக்கும் – அவன் முஸல்மான் – இந்தப் பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டுப் போய் விட்டது." (கம்பா நதி, பக். 37)** மற்றும் **"அந்தச் சம்பவம் நடந்த மூன்றாவது நாளே காலை தெரு பம்புக்குத் தண்ணீர் எடுக்கப்போன நிர்மலாவைக் காணவில்லை. அந்த முஸ்லீம் பையனோடு வாழப் போய் விட்டாள்." (கம்பா நதி, பக். 38)** ஆகிய வரிகள் திருமணமாகாது கிராமங்களில் படிக்கும் மாணவ – மாணவியின் சிக்கலான உறவை காட்டுகிறது.

- **அத்தான் – மச்சினி உறவு:**

சௌந்திரத்தின் அக்கவான சங்கர வடிவுக்கும் சண்முக பிள்ளைக்கும் திருமணம் நடந்தது. சில காலங்களுக்குப் பின் தனது மனைவியிடம் சௌந்திரத்தையும் தனக்கு கட்டி வைக்குமாறு கூறுகிறார். இதனை, **"சௌந்திரத்தையும் கல்யாணம் செய்துவை என்று**

**அத்தான் என்னை ரொம்பவும் தொந்திரவு செய்கிறார்கள். சௌந்திரத்தை நான் கேட்டபோது அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்கும் இதில் ஆசை இருக்கும் போல.” (கம்பா நதி, பக்.** 81-82) என்ற சங்கர வடிவின் கூற்று வாயிலாகக் கிராமங்களில் வாழும் அத்தான் – மச்சினி உறவு வெளிப்படுகிறது.

- **தந்தை – மகன் உறவு:**

நல்லபெருமாள் பிள்ளை தனது மகனான ரத்தினத்துக்கு ஓர் பணக்காரப் பெண்ணோடு திருமணம் செய்து வைத்தார். அப்பெண் சில மாதங்களில் புத்தி கெட்டு பைத்தியமானாள். இதனால், பிள்ளை தனது மகனிடம் வேறு பெண்ணை வைத்துக் கொள்ளுமாறு அனுமதியளிக்கிறார். இதனை, **“நல்லபெருமாள் பிள்ளை தன்னுடைய மகனுக்கு ஒரு சலுகை கொடுத்தார். அந்தப்படி ரத்தினம் நாகர்கோவிலில் ஒரு வாத்திச்சியை வைப்பாக வைத்துக் கொண்டான்.” (கம்பா நதி, பக்.** 127) என்ற ஊர்மக்களின் கூற்று வாயிலாகக் கிராம மக்களின் தந்தை - மகன் உறவு வெளிப்படுகிறது.

**3. மூட நம்பிக்கைகள்:**

**“மூடநம்பிக்கை மனித அமைப்பிலேயே ஓர் அம்சம்” (உலக அறிஞர்களின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், பக்.** 57) என்கிறார் கதே. அறிவியல் வளர்ச்சி பெற்று விளங்கும் இக்காலத்திலும் பல கிராமங்களில் வாழும் மக்கள் மூடநம்பிக்கை கொண்டவர்களாகவே உள்ளனர்.

வேலை தேடி அலையும் பாப்பையா பல இடங்களில் நடந்த நேர்முகத் தேர்வில் (இண்டர்வியூவில்) தேர்ச்சி பெறவில்லை. மற்றொரு முறை, நேர்முகத் தேர்வுக்கு செல்ல தயாராகும் பாப்பையா பக்கத்து வீ ட்டுப் பெண்ணான மீனா குளிக்கிறாள் என்றால் வேலை கிடைத்துவிடும் என நம்புகிறான். இதனை, **“மீனாதான் குளித்துக் கொண்டிருந்தது என்றால் அன்றைக்கு இண்டர்வியூவில் செலக்ட் ஆகிவிடும் என்று நினைத்தான்.” (கம்பா நதி, பக்.** 28) என்ற வரியால் அறியமுடிகிறது.

வேலை வேண்டி நேர்முகத் தேர்வுக்கு சென்று கொண்டிருக்கும் பாப்பையா, தான் செல்லும் பேருந்து பாலத்தைக் கடப்பதற்குள் எதிரில் லாரி வந்தாள் வேலை கிடைக்கும் என்றும் அவ்வாறு லாரி வாராமையால் வேலை கிடைக்கது என்றும் நம்புகிறான். இதனை, **“எதிரே ஒரு லாரி, இந்த பஸ் பாலத்தைக் கடப்பதற்குள் வந்தால் வேலை கிடைத்துவிடும் என்று நினைத்தான்.” (கம்பா நதி, பக்.** 52), **“இந்தத் தடவை வராமல் போனது வேலை கிடைக்காததற்குத் தானா?” (கம்பா நதி, பக்.** 53) போன்ற வரிகளால் ஆசிரியர் பாப்பையாவை மூடநம்பிக்கையின் மொத்த உருவமாகத் தனது நாவலில் காட்டியுள்ளார்.

**முடிவுரை:**

**“மதம் மனிதனை மிருகமாக்கும். சாதி மனிதனை சாக்கடையாக்கும்” (சமூக அறிஞர்களின் வாசகங்கள், பக்.** 28) என்கிறார் பெரியார். கிராமங்களில் வாழும் மக்களிடம்

காணப்படும் சாதி ஏற்றத்தாழ்வு, உறவுமுறை, மூடநம்பிக்கை போன்ற தலைப்புகளின்கீழ் அம்மக்களின் வாழ்க்கை சிக்கல்களை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. சங்கரன் பிள்ளை, நடராஜ பிள்ளை, வெள்ளமடத்து ஆச்சி மற்றும் சௌந்திரம் ஆகிய பாத்திரங்கள் வாயிலாகக் கிராம மக்களிடம் காணப்படும் சாதி ஏற்றத்தாழ்வையும் பாப்பையா என்ற இளைஞனின் பாத்திரம் வாயிலாக மூடநம்பிக்கைகளையும் நாவலாசிரியர் காட்டியுள்ளார். மேலும், சங்கரன் பிள்ளை, நடராஜ பிள்ளை, நல்லபெருமாள் பிள்ளை, ரத்தினம், சண்முக பிள்ளை, சங்கர வடிவு, சௌந்திரம் போன்ற கதாப்பாத்திரங்கள் வாயிலாக உறவுமுறை சிக்கல்களையும் வண்ணநிலவனின் நாவலில் காணமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்:


[1] கலைமணி. என்.வி (நூ.ஆ), உலக அறிஞர்களின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் (மின்னூல்), 2018. http://freetamilebooks.com/ebooks/ulaga_aringargalin_nammai_maempaduthum_ennangal/

[2] ஏற்காடு இளங்கோ (நூ.ஆ), சமூக அறிஞர்களின் வாசகங்கள் (மின்னூல்), 2015. http://freetamilebooks.com/ebooks/socialexperts/

[3] பழங்காசு.ப.சீனிவாசன் (நூ.ஆ), கடவுளின் அடிமைகள், மருதம் பதிப்பகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர், 2000.

[4] வண்ணநிலவன் (நூ.ஆ), கம்பா நதி, நர்மதா பதிப்பகம், சென்னை, 1985.

[5] ஜார்ஜ் டிமிட்ரோவ் (நூ.ஆ), 2014, மதங்களின் பார்வையில் பெண்கள் (மின்னூல்), http://freetamilebooks.com/ebooks/women-as-seen-by-religions/